**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

CC.No.84/2022
Prosecution witness.06

| | |
|---|---|
| பெயர் : கண்ணன் | தொழில் : |
| தந்தை/கணவர் பெயர் : கார்த்திக் | கிராமம் : |
| வயது : | தாலுகா : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths act, 1969 (Central Act 44 of 1969)

27.03.2026

(3ம் எதிரி ஆஜர், 1, 2, 4, 5ம் எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

நான் ஓரிவயல் கிராமத்தில் குடியிருந்து தற்போது வேலை தேடிக்கொண்டிருக்கிறேன். சுமார் 4, 5 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் எங்கள் ஊரில் ஏதோ சண்டை நடந்ததாக கூறி முதுகுளத்தூர் போலிசார் எனது வீட்டின் அருகே வந்து என்னிடம் கையொப்பம் கேட்டார்கள். அதனால் கையொப்பம் செய்து கொடுத்தேன். இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **அந்த கையொப்பம் மட்டும் அசா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டியதன் பெயரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்).

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

கடந்த 18.11.2018 ம் தேதி 14.00 மணியளவில் நானும், காளீஸ்வரன் என்பவரும் இவ்வழக்கின் சம்பவ இடத்தில் நின்று கொண்டிருந்தபோது முதுகுளத்தூர் காவல்நிலைய சார்பு ஆய்வாளர் வழக்கு சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்தார் என்றால் சரியல்ல. மேற்படி பார்வை மகசரில் நான் சாட்சியாக கையொப்பம் செய்து விட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இல்லை.